"மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத்
தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினள்போல்
பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்"

(சிலம்பு. காட்சிக்காதை : 84-86)

என்று சாத்தனார் செங்குட்டுவனிடம் கூறினார். பாண்டியன் இறந்த செய்தி கேட்ட செங்குட்டுவன்,

"வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது"

(சிலம்பு. காட்சிக்காதை : 98,99)

என்று பாராட்டிக் கூறினான்.

செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில்கட்டி விழாவெடுத்த காலத்தில் தெய்வமான கண்ணகி செங்குட்டுவன் முதலிய வேந்தர்களுக்கெல்லாம் காட்சிதந்து அவர்களை வாழ்த்தினாள். அவ்வாறு வாழ்த்தும்போது,

"தென்னவன் தீதிலன், தேவர்கோன் தன்கோயில்
நல்விருந் தாயினான், நானவன் தன்மகள்"

(சிலம்பு. வாழ்த்துக்காதை : 10)

என்று கூறினாள். இவ்வாறு, பாண்டியனைச் செங்குட்டுவனைக் கொண்டும், பாதிக்கப்பட்ட கண்ணகியைக் கொண்டும் பாராட்டுமாறு செய்திருப்பது இளங்கோவடிகளின் பண்பட்ட உயர்ந்த உள்ளத்தையும், நாடக உத்தியையும் நன்கு காட்டுகிறது.

இளங்கோவடிகள், சமணசமயத் துறவியாயினும் சைவசமயக் கடவுளாகிய சிவபெருமானைப் **பிறவா யாக்கைப் பெரியோன்** என்று பாராட்டுகின்றார். வேட்டுவவரியில் கொற்றவையைப் பாராட்டும்போது சிவபெருமானின் சிறப்புக்களை எல்லாம் கொற்றவைக்கு ஏற்றிக் கூறும் வகையில்,

"விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ, ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்"

(சிலம்பு.வேட்டுவவரி : 22)

என்று பாடியுள்ளார். தேவர்களும், அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடைந்த காலத்தில் வெளிப்பட்ட ஆலகால நஞ்சைச்

Scanned by CamScanner

சிவபெருமான் உண்டு உலகைப் பாதுகாத்த புராணக்கதை இங்குச் சுட்டப்படுகின்றது.

நாலாயிர திவ்விய பிரபந்தத்திலுள்ள நாலாயிரம் பாடல்களைப் பாடிய பன்னிரு ஆழ்வார்களுக்கும் முன்பே வாழ்ந்தவர் இளங்கோவடிகள். அந்த ஆழ்வார்களுக்கெல்லாம் முன்னோடியாக ஆய்ச்சியர் குரவையில் இளங்கோவடிகள் திருமாலைப் போற்றிப் பாடியுள்ள,

"மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே"

"மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை, நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணம்முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராயணா என்னா நாவென்ன நாவே"

(சிலம்பு. ஆய்ச்சியர்குரவை : 35,37)

என்பன போன்ற பாடல்கள் தேனினும் இனிய தீந்தமிழ்ப் பாடல்கள் ஆகும்.

திருவரங்கத்தில் பள்ளிகொண்டுள்ள திருமாலின் கிடந்த வண்ணத்தையும், திருவேங்கடமலையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருமாலின் நின்ற வண்ணத்தையும் இளங்கோவடிகள் அருமையாகப் பாடுகின்றார். பொன்னாலாகிய குன்றம் ஒன்றின்மீது, நீலநிறமேகம் ஒன்று அப்படியும் இப்படியும் ஆடாது அசையாது ஓரிடத்தில் அழகாக நிற்பது போல, கடல்போல் பொங்கிப் பெருகி ஓடிவருகின்ற காவிரியாற்றின் நடுவே உள்ள திருவரங்கத்தில் ஆயிரம் தலைகளை உடைய பொன்னிறமான ஆதிசேடன் என்ற பாம்பின்மீது கருமை நிறமுடைய திருமால் பள்ளி கொண்டுள்ளார் என்பதனை,

Scanned by CamScanner

"நீலமேகம் நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறல்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்"

(சிலம்பு. காடுகாண்காதை : 35-40)

என்று அழகுறப் பாடுவார். அதுபோலவே, மிகுதியான அருவிநீர் கொட்டுகின்ற வேங்கடமலையின் உச்சிமேல், வலப்பக்கம் ஞாயிறும், இடப்பக்கம் திங்களும் விளங்க, அவற்றுக்கு இடையில், மின்னலாகிய ஆடையை உடுத்து, வானவில்லாகிய மாலையை அணிந்து கொண்டு நல்ல கருநிறமுடைய மேகம் ஒன்று நிற்பது போல், பகைவரை அழிக்கும் சக்கரப்படையை வலக்கையிலும், பாஞ்சசன்னியம் என்னும் சங்கை இடக்கையிலும் ஏந்திக்கொண்டு, பொன்னாலாகிய ஆரத்தை மார்பில் அணிந்து கொண்டு, பொன்னிறப் பூப்பொறித்த பட்டாடையை இடையில் உடுத்துக்கொண்டு திருமால் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றார் என்பதையும் இளங்கோவடிகள் அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

"வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக்கோடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையில் ஏந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"

(சிலம்பு. காடுகாண் காதை : 41-5)

என்னும் சிலப்பதிகார அடிகள் படிப்பவர் நெஞ்சில் ஒருமுறையாவது திருப்பதி சென்று, திருமாலின் நின்ற வண்ணத் திருக்கோலக் காட்சியைப் பார்த்து வரவேண்டும் என்ற ஆவலைத்

Scanned by CamScanner

தூண்டும். மாடலமறையோன் உறையூரிலிருந்து மதுரைக்குச் செல்வதற்குரிய மூன்று வழிகளைக் கோவலனிடம் கூறினான். "மூன்று வழிகளில் இடப்பக்கத்து வழியாகச் சென்றால் தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும். அதனை வலங்கொண்டு நடந்தால் அழகர் மலைக்குச் செல்லலாம். அங்கே, **புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி,** என்னும் பெயருடைய மூன்று பொய்கைகள் உள்ளன. அவற்றுள், புண்ணிய சரவணத்தில் நீராடினால் விண்ணவர் கோமானாகிய இந்திரனால் எழுதப்பெற்ற **ஐந்திரவியாகரணத்தைப்** படிக்காமலே முழுமையாகத் தெரிந்து கொள்வீர். பவகாரணியில் படிந்து நீராடினால் உங்களின் முற்பிறப்புத் தெரியவரும். இட்டசித்தியில் நீராடினால் நினைத்த காரியங்கள் நினைத்தபடியே நடக்கும்" என்று கூறினான். அவனுக்கு விடை கூறிய **கவுந்தியடிகள்** பொய்கையில் நீராட வேண்டிய தேவை எங்களுக்கு இல்லை; வரையறுத்த வாழ்நாளை உடைய இந்திரனால் எழுதப்பெற்ற நூலில் உள்ள செய்திகளை எல்லாம் எங்களுடைய அருகதேவன் எழுதிய **மெய்ப்பாட்டியற்கை** என்னும் நூலில் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். இப்பொழுது உள்ள பிறப்பைக் கொண்டே முற்பிறப்பில் நாம் எப்படி இருந்திருப்போம் என்பதை நீயும் கண்டிருப்பாய் அல்லவா? எப்பொழுதும் உண்மையே பேசி எல்லா உயிர்களும் இனிது வாழ்வதற்கு உரிய தொண்டுகளைச் செய்வோர் இந்த உலகில் அடைய முடியாத பொருளும் உண்டோ? ஆகவே, மலைக்குகையில் புகுந்து புண்ணியசரவணம் முதலிய பொய்கைகளில் நீராட வேண்டிய தேவை எங்களுக்கு ஏற்படவில்லை என்று விடை கூறினார்.

"வாய்மையின் வழாஅது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டோ எய்தா அரும்பொருள்"

(சிலம்பு.காடுகாண்காதை : 158,159)

என்று கவுந்தியடிகள் கேட்ட கேள்வி மிகவும் பொருள் பொதிந்த கேள்வி ஆகும். கவுந்தியடிகள் கேட்ட அந்தக் கேள்வியைத்தான் பகுத்தறிவுப் பகலவனாகிய தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் கேட்டனர். மகாகவி பாரதியும் தாம் எழுதிய புதிய ஆத்திசூடியில் "**சோதிடம் தனை இகழ்**" என்று முழங்கினார்.

இளங்கோவடிகள் வஞ்சிக்காண்டத்து வாழ்த்துக் காதையில் சேரவேந்தனை விடவும் சோழனையும், பாண்டியனையும் உயர்வாகப் பாராட்டிக் கூறியுள்ளார். சோழப் பெருவேந்தனைப் பாடிய

“புறவுநிறை புக்குப் பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்யார் அம்மானை
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் முன்வந்த
கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை”

(சிலம்பு. வாழ்த்துக்காதை : 17)

என்னும் பாடலில் சோழவேந்தர்களின் முன்னோர்களாகிய **சிபிச்சக்கரவர்த்தியையும், மனுநீதிச் சோழனையும்** புகழ்ந்து பாராட்டியுள்ளார்; மதுரைக் காண்டத்திலுள்ள ஆய்ச்சியர் குரவையில் மூவேந்தர்களையும் உயர்வு, தாழ்வு இல்லாமல் இளங்கோவடிகள் பாடியுள்ள திறம் மிகவும் போற்றுதற்குரியது.

கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுலம் மேய்த்துக் குருந்தொசித்தான் என்பரால்”

(சிலம்பு. ஆய்ச்சியர்குரவை : 29)

என்று பாண்டியனையும்,

“பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந்திகிரிப் பொருபடையா னென்பரால்”

(சிலம்பு. ஆய்ச்சியர்குரவை: 30)

என்று சோழனையும்,

“முந்நீரினுள் புக்கு மூவாக்கடம் பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவில் தோளோச்சிக் கடல்கடைந்தான் என்பரால்”

(சிலம்பு. ஆய்ச்சியர்குரவை:31)

என்று சேரனையும் போற்றிப் பாடியுள்ள பாடல்கள் நம்

சிந்தனையைக் கவர்வன ஆகும். இவ்வாறு, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தைப் பாடி அருளிய இளங்கோவடிகள் நூலின் இறுதியில் உலக மக்களை நோக்கிச் சில வேண்டுகோள்களை முன் வைக்கின்றார். இமையோர் இளங்கொடியாகிய கற்பரசி கண்ணகியின் காப்பியத்தைத்

"தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வந் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொற் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானம் செய்ம்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட்பு இகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருண்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளுங் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது; ஒல்லுவது ஒழியாது;
செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்"

(சிலம்பு.வரந்தருகாதை : 185-202)

என்று இளங்கோவடிகள் வேண்டுகின்றார். இளங்கோவடிகளின் வேண்டுகோளை இயன்றவரை நிறைவேற்றித் தருமாறு என்னுரை கேட்ட எல்லாரையும் நான் அன்புடன் வேண்டுகின்றேன்.

Scanned by CamScanner

## ஆண்டாளும் மீராவும்

தமிழ்நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாகத் திருமாலை வழிபடு கடவுளாகக் கொண்ட வைணவ சமயம் செல்வாக்குப் பெற்று விளங்குகிறது. தமிழ் நாட்டில் பழங்காலத்தில் முல்லை நிலத்தில் திருமாலும், குறிஞ்சி நிலத்தில் முருகனும், மருத நிலத்தில் சிவபெருமானும் இந்திரனும், நெய்தல் நிலத்தில் வருணனும் கடவுள்களாக விளங்கினர். இதனை

மாயோன் மேய காடுறை உலகமும்,
சேயோன் மேய மைவரை உலகமும்,
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

(தொல். பொருள் - அகத்திணையியல்: 5)

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம்.

புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களில் திருமாலைப் பற்றிய செய்திகள் நிரம்ப இடம் பெற்றுள்ளன. சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய இரட்டைக் காப்பியங்களும் திருமாலின் சிறப்பைக் கூறுகின்றன. திருமாலின்பால் பேரீடுபாடு கொண்ட ஆழ்வார்களைப் போலவே சைவசமயத் துறவியாகிய இளங்கோவடிகளும் திருமாலின் பேரழகில் ஈடுபட்டுப் பாடுகின்றார்.

கடல்போல் பொங்கிப் பெருகி ஓடிவரும் காவிரி ஆற்றின் நடுவில் உள்ள தீவுப் பகுதியாகிய திருவரங்கத்தில் பள்ளிகொண்டுள்ள திருமால், நெடிதுயர்ந்த பொன்மலை ஒன்றின் மேல், நீலநிற மேகம் ஒன்று அப்புறமும் இப்புறமும்

அசையாது படுத்திருப்பது போல, ஆயிரம் தலைகளுடன் கூடிய ஆதிசேடன்மேல் அழகாக அறிதுயில் கொள்ளும் காட்சியை

நீல மேகம் நெடும்பொற் குன்றத்துப்
பால் விரிந்து அகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறல்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்

(காடுகாண் காதை : 35:40)

என்று பாடுவார்.

அதுபோலவே திருவேங்கட மலையில் எழுந்தருளியுள்ள திருமாலின் திருக்கோலத்தை

வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங்கு ஓங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக்கோடி உடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங்கு ஆழியும், பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையின் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்

(காடுகாண் காதை-41-51)

என்று அழகுறப் பாடுவார்.

அந்தத் திருமால் மிகவும் பெரியவன், மாயவன், உலகங்களை எல்லாம் தனது உந்திக் கமலத்தில் தாங்கி நிற்பவன், அவனுடைய கண்களும், திருவடிகளும், கைகளும், திருவாயும் சிவந்த நிறத்தன. ஆனால், அவனோ கரியநிறம் படைத்தவன். காண்டற்கு அரிய பேரழகு படைத்த அவனைக் காணக் கண்கோடி வேண்டும். மறந்துபோய்க் கண்களை இமைத்தால்,

அந்தக் கணநேரத்தில் அவன் அழகைப் பருக முடியாத குறையுண்டாகும். ஆகையால், கண்ணிமைத்துக் காணும் கண்கள் குறைபாடு உடைய கண்கள். அவை மயில்தோகைக் கண்கள், மரக்கண்கள், கரும்பிலும் மூங்கிலிலும் உள்ள கணுக்கள். அவை பயன்மிகுந்த மானுடக் கண்கள் அல்ல.

> பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
> விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
> திருவடியும் கையும் திருவாயும் செய்ய
> கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
> கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே
>
> (ஆய்ச்சியர் குரவை-படர்க்கைப்பரவல்-2)

என்று உள்ளம் உருகப் பாடுவார் இளங்கோவடிகள். பெருஞ்சிறப்புக்குரிய திருமாலின் பேரழகிலும், அற்புதம் நிரம்பிய மாயச் செயல்களிலும் பெரிதும் ஈடுபாடுகொண்டு ஆழ்வார்களாகவும், ஆசாரியர்களாகவும், அன்பர்களாகவும் வாழ்ந்த ஆடவர்கள் ஆயிரம் ஆயிரம்பேர். ஆனால், பெண்களைப் பொருத்தவரையில் திருமால் பத்தியில் சிறந்து நின்ற பெண்கள் இருவர் ஆவர். அவருள் பன்னிரண்டு ஆழ்வார்களுள் ஒருவராகிய ஆண்டாள் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் வாழ்ந்தவர். இன்னொருவர் பாரத தேசத்தின் வடபகுதியில் உள்ள இராசபுதனத்தில் வாழ்ந்த இராசபுத்திரர்கள் குடியில் கி.பி 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மீரா அவர்கள் ஆவார். மீரா ஒருதாய் வயிற்றில் மகளாகப் பிறந்தவர்; சிறுமியாக இருந்த போதே தந்தையை இழந்தவர்; ஆதலின், பாட்டனாராகிய தாதுாராவ் என்பவரால் வளர்க்கப்பெற்றவர்; தாதுாராவைப்பார்க்க வரும் சாதுக்களின் பஜனைப் பாடல்களால் கவரப் பெற்றவர்; அந்தச் சாதுக்களுடன் சேர்ந்து கொண்டு கிருஷ்ணனைப் பற்றிய பாடல்களைப் பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் காலம் கழித்தவர்; கண்ணனையே மணந்து கொள்ள வேண்டும் என்று கூறியவர்; ஆயினும் பாட்டனாரின் அன்பான வற்புறுத்தல் காரணமாக விருப்பமில்லாமலேயே மேவார் அரசன் இராணா பிரதாப் சிங்கிற்கு மனைவி ஆக்கப்பட்டவர்.

அரசன் ஒருவனுக்கு மனைவியான பின்னரும் குடும்ப வாழ்க்கையில் சிறிதும் ஈடுபாடு இல்லாமல் அந்தப்புரத்தைவிட்டு வெளியில் வந்து முன்பு போலவே கிருஷ்ணன்மேல் ஈடுபாடு கொண்டவராய்ச் சாதுக்களுடன் சேர்ந்து கொண்டு கிருஷ்ணனைப் பற்றிய பஜனைப் பாடல்களைப் பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் திரிந்தார். இதனால் கணவனால் பற்பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டாலும், கிருஷ்ணனது பெருங்கருணை காரணமாக அக்கொடுமைகளிலிருந்து தப்பி, துவாரகைக்குச் சென்று அங்கு நெடுங்காலம் கிருஷ்ணபக்தியில் ஈடுபட்டு, இறுதியில் கிருஷ்ணனால் ஆட்கொள்ளப் பட்டார். மீராவின் பாடல்கள் ஏழை எளிய மக்களும் கேட்டு நெஞ்சம் உருகிக் கிருஷ்ணன் பக்தியில் ஈடுபடுமாறு செய்தன.

ஆனால், ஆண்டாளோ மீராவின் காலத்திற்கு முன்னால் ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளுக்கு முன், தமிழ் நாட்டில், திருவில்லிபுத்தூரில் வாழ்ந்தவர். அவருக்குத் தாய்தந்தை யாரென்பது தெரியவில்லை.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு (பெரியாழ்வார் திருமொழி-1)

"வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு" (பெரியாழ்வார் திருமொழி-2)

என்று திருமாலுக்கும், திருமகளுக்கும் பல்லாண்டு பாடிய பெரியாழ்வாரின், துளசிவனத்தில், அழகான சிறுமகவாய்ச் சிரித்துக்கொண்டு கிடந்து, பெரியாழ்வாரால் எடுத்து வளர்க்கப் பெற்றவர். திருமகளே இவ்வாறு பெரியாழ்வாரின் மகளாய்த் திருவில்லிபுத்தூரில் வாழ்ந்தார் என்பர் பெரியோர். **பெரியாழ்வார் விட்டுணுசித்தர் என்னும் இயற்பெயர் பூண்டவர்.** பாண்டிய மன்னனால் பெரிதும் கொண்டாடப்பெற்ற மகாஞானி. ஆதலின் பெரியாழ்வாரால் வளர்க்கப்பெற்ற கோதையாகிய ஆண்டாள், பாண்டியன் கொண்டாடிய **பட்டர்பிரான் திருமகளார்** என்று

பக்தர்களால் பாராட்டப்பெற்றார். பெரியாழ்வார் திருமாலுக்காக மாலைகளைத் தொடுத்துவைத்து விட்டு வெளியில் சென்று வரும்போது, ஆண்டாள் அந்த மலர் மாலைகளை எல்லாம் தம் கூந்தலில் சூட்டி அழகுபார்த்து அவை திருமாலுக்கு உரியவைதாம் என்று மனநிறைவடைந்தபின், முன்பிருந்தபடியே வைத்துவிடுவார். அப்படி ஆண்டாள் நாடோறும் சூடிக்கொடுத்த மலர்மாலைகளையே பெரியாழ்வார் திருமாலுக்குச் சூட்டுவார். ஒரு நாள் ஆண்டாளின் நீண்ட தலைமுடி ஒன்று மாலையில் சிக்கிக் கிடந்தது. அதனைக் கண்ட பெரியாழ்வார் ஆண்டாளிடம் நடந்தது என்னவென்று வினாவினார். ஆண்டாளும் ஒளிக்காது உண்மையைக் கூறினார். அது கேட்டு மனம் வருந்திய பெரியாழ்வார் மானுடர் சூடிய மாலையைத் திருமாலுக்குச் சூட்டக் கூடாதென்ற மரபினை எண்ணி, வேறு புதுமாலையைத் தொடுக்க முடியாத நிலையில் அன்றைக்குத் திருமாலுக்கு மலர்மாலை சூட்டாமல் வழிபாடு செய்தார். அன்று **இரவு திருமால் பெரியாழ்வார் கனவில் தோன்றி, ஆண்டாள் சூடிக்கொடுத்த மலர்மாலையே தமக்கு உவப்பைத் தருவதாகும். ஆதலால் இனி ஆண்டாள் சூடி அழகுபார்த்த மாலைகளையே தமக்குச் சூட்டுமாறு பணித்தருளினார்.** அதுகேட்ட பெரியாழ்வாரும் அப்படியே செய்து வந்தார். அன்று முதல் ஆண்டாள் **சூடிக்கொடுத்த சுடர்க்கொடி** என்று அன்பர்களால் அழைக்கப் பெற்றார்.

நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் ஆண்டாள் பாடிய முப்பது திருப்பாவைப் பாடல்களுடன், நாச்சியார் திருமொழி என்னும் பகுதியில் அமைந்த 143 பாடல்களும் சேர்ந்து மொத்தம் 173 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

நாச்சியார் திருமொழியில் அமைந்த 143 பாடல்களும் ஆண்டாள் திருமாலைத் தம்முடைய நாயகனாகக் கருதி, அவன்மீது கங்குகரை காணாத கடல்போன்ற பெருங்காதல் கொண்டு பாடிய பாடல்களாகும். நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவனை நாயகனாகவும், தம்மை

Scanned by CamScanner

நாயகியராகவும் கருதிக்கொண்டு பாடிய பாடல்கள் தமிழ் இலக்கியங்களில் ஏராளமாக உள்ளன. திருஞான சம்பந்தப் பெருமான் சீர்காழியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமானை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் கருதிக்கொண்டு

சிறையாரும் மடக்கிளியே இங்கேவா, தேனொடுபால்
முறையாலே உணத்தருவன், மொய்பவளத்தொடுதரளம்
துறையாரும் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே

(சம்பந்தர் தேவாரம்)

என்று பாடிய பாட்டு இதற்கு ஏற்ற சான்றாகும்.

நம்மாழ்வாரும் தம்மை நாயகியாகக் கருதிக்கொண்டு தம் நாயகன் ஆகிய திருமாலிடம் அன்னம், அன்றில், பூவை முதலிய பறவைகளைத் தூதுவிடுத்துப் பாடிய பாடல்கள் நாலாயிரதிவ்விய பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ளன.

நாலாயிர திவ்விய பிரபந்தத்துக்கு உரையெழுதிய சான்றோர்களின் கூற்றை மனத்துட் கொண்டு அறிஞர் பெருமகனாகிய மு.இராகவையங்கார் அவர்கள்

"ஆண்பாலரான மற்றை ஆழ்வார்களும் தம்மை நாயகியராகவும் திருமாலை நாயகனாகவும் கொண்டு பாடிப் போந்தனராயினும், அவர்கள் கொண்ட நாயக - நாயகி பாவம் அநுகாரமேயாதலின் இயற்கையானது அன்று என்றும், அதனால் அன்னோர் திருமாலிடஞ் செலுத்திய அன்பு மேட்டுமடை நீர்போன்றது என்றும், ஒன்றையும் அநுகரியாமல் பெண்பாலராய்ப் பிறந்தவர் அழகிய மணவாளனையே தம் நாயகனாக வரித்துக் கொண்டு, அவனிடம் உள்ளுருகச் செலுத்தும் இவரது இயற்கைக் காதற் பெருவெள்ளம் பள்ளமடை போன்றது என்றும் பெரியோர்கள் எழுதிய கருத்து ஈண்டு அறியத் தக்கது"

என்பார். ஆண்டாளுக்குத் திருமணம் செய்தற்குரிய பருவம் வந்தபோது, அவரைத் தக்க ஆண்மகன் ஒருவனுக்கு மணமுடிக்கக்

Scanned by CamScanner

கருதிப் பெரியாழ்வாரும், அவர் உறவினர்களும் முயற்சி செய்வதைக் கேட்டு ஆண்டாள் வெகுண்டார்.

"வானிடை வாழுமவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்தஅவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க் கென்று
உன்னித்து எழுந்தஎன் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே"

(நாலாயிர திவ்விய பிரபந்தம்-508)

என்று மன்மதனிடம் முறையிட்டார்.

ஆண்டாளின் மனக்கருத்தறிந்து பெரியாழ்வாரும், உறவினர்களும் அவர் விரும்பியவாறே ஆவதாக என்று வாளாவிருந்தனர். இந்நிலையில் நாட்களும், மாதங்களும், ஆண்டுகளும் உருண்டோடின. நாயகனாகிய திருமால் தம்மை நாடிவந்து நாடறிய நல்ல கல்யாணம் செய்வான் என்று எதிர்பார்த்து ஆண்டாள் ஏமாற்றம் அடைந்தார். திருமால் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருமாலிருஞ் சோலை மலையில், ஆயிரக் கணக்கான கொன்றை மரங்கள் பொன்னிறமான பூக்களைச் சரஞ்சரமாகப் பூத்துப் பொலிவோடு விளங்குகின்றன, அவற்றை ஆண்டாள் பார்க்கின்றார். ஆண்டவனாகிய மாயவன் தமக்கு அருள் செய்யாமையால் தம் மேனியும் பசலைபடர்ந்து பொன்போல் விளங்குவதையும் பார்க்கின்றார். அவருக்கு வேதனை பெருகுகின்றது. கொன்றைப் பூ அழகருக்கு ஆகாது. அதனால் வைணவர்கள் கொன்றைப் பூவைப் பறிப்பதில்லை. கொன்றை சிவபெருமானுக்கு உகந்த பூவாக இருப்பினும், அது அழகர் மலையில் பூத்திருப்பதால் சிவனடியார்களும் அதனைப் பறிப்பதில்லை. இவ்வாறு அழகர் மலையில் பூத்த கொன்றைப்பூ வைணவர் சைவர் இருவராலும் பறிக்கப்படாதது போல அழகர்மலை இறைவனும் தம்மைப் புறக்கணிக்க, உற்றார் உறவினரும் புறக்கணிக்கத் தம் நிலை மிகவும் இரங்குதற்கு உரியது ஆகிவிட்டதே என்று ஆண்டாள் மிகவும் மனம்வருந்தி

"கோங்கலரும் பொழில் மாலிருஞ் சோலையில் கொன்றை கள்மேல்
தூங்குபொன் மாலைகளோ டுடனாய்நின்று தூங்குகின்றேன்
பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்
சார்ங்கவில் நாணொலியும் தலைப்பெய்வது எஞ்ஞான்றுகொலோ?"

(நாலாயிர திவ்விய பிரபந்தம்-595)

என்று பாடி ஏங்கினார்.

இந்நிலையில் தம் காதலராகிய திருமாலின் கரியநிறம் போலக் காட்சி தரும் கார்மேகங்களைப் பார்த்து, "எம்முடை-ய மேனியின் ஒளி, கை வளையல்கள், சிந்தை, உறக்கம் இவையெல்லாம் எம் பெருமை குறையுமாறு எம்மை விட்டு நீங்கிவிட்டன. இந்நிலையில் மேகங்காள், குளிர்ந்த அருவிகள் ஓடிவருகின்ற வேங்கட மலைமேல் கோயில் கொண்டுள்ள எம்பெருமான் ஆகிய கோவிந்தனுடைய குணங்களைப் பாராட்டி இடி இடிக்கும் மேகங்களாகிய உங்களைப் பார்த்து நான் உயிரோடு உள்ளேன் எம் நிலைமையைக் கொஞ்சம் கோவிந்தனுக்கு எடுத்துச் சொல்லுங்கள்" என்று வேண்டிக் கொண்டார்.

"திருமால் தம்வாயில் **பாஞ்ச சன்னியம்** என்ற சங்கை வைத்து ஊதுகின்றார். எனவே, ஏ சங்கே, நீ திருமால் திருவாயின் பெருமையை நன்கறிவாய். அந்த வாய் எப்படி இருக்கும்? கருப்பூரம் போல் மணக்குமோ? தாமரைப் பூப்போல் வாசனை வீசுமோ? செந்நிறப்பவளம் போன்ற சிவந்தவாய் தித்திப்பாக இருக்குமோ? சொல்வாயாக" என்று ஆண்டாள் கேட்கின்றார். தமிழ் மணக்கும் தம் செவ்வாயால்

கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழிவெண்சங்கே

(நாலாயிர திவ்விய பிரபந்தம்-564)

என்றும் ஆண்டாள் பாடும் பாடலில் தமிழ் மணக்கின்றது.

தோகைவிரித்து ஆடுகின்ற ம யில்களைப் பார்த்து, அவை திருமாலின் நிறம் பெற்றனவாதலின், அவற்றின் காலடிகளில் வீழ்ந்து பணிகின்றார்.

கணமா மயில்காள் கண்ணபிரான் திருக்கோலம் போன்று
அணிமா நடம்பயின்றாடுகின்றீர்க்கு அடி வீழ்கின்றேன்
(நாலாயிர திவ்விய பிரபந்தம்–612)

என்று அரற்றுகின்றார். கண்ணனைப் போன்ற கருநிறம் படைத்த கடலைப் பார்த்ததும்

'வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் - பண்டொருநாள் கடல்வயிறு
கலக்கிய நிகழ்ச்சி'

ஆண்டாளின் நினைவுக்கு வந்தது. அதனால், "கடலே, ஏ கடலே, கண்ணன் உன்னைக் கடைந்து கலக்கிய காலத்தில் உன் உடலுள் புகுந்து நின்று நின் ஊறல் அறுத்ததுபோல், இப்பொழுது என்னையும் என் உடலுள் புகுந்து நின்று என் ஊறல் அறுக்கின்றான். அந்த மாயவனுக்கு நான்படும் நடலைகளை யெல்லாம் அவன் பள்ளிகொள்ளும் பாம்பணைக்கே சென்று எடுத்துரைப்பாயாக" என்று வேண்டுகின்றார்.

இன்னிசை பாடும் கருங்குயில்களின் இசைகேட்டதும் அவரது விரகதாபம் பெருகுகிறது. அதனால், "இசைபாடும், குயில்களே, நான் வேதனையால் துடிக்கும்போது உங்களுக்கு என்ன பாட்டு வேண்டிக்கிடக்கிறது? உங்கள் பாட்டைக் கேட்டு என்னால் எப்படிப் பாராட்ட முடியும்? திருவேங்கட நாதன் எமக்கு வந்து அருள்செய்தால் அதன் பின் எங்கள் சோலைக்கு வந்து நீங்கள் பாடுங்கள். கருடக் கொடியுடைய கண்ணன் வந்து அருள்செய்தபின் நீங்கள் வந்து பாடுங்கள், அப்போது மகிழ்ச்சியோடு நான் உங்கள் பாடல்களைக் கேட்டு மகிழ்வேன்" என்று ஆண்டாள் அவலக்குரல் எழுப்புகின்றார்.

மாயவன் மார்பில் உறையும் திருமகளைப் பார்த்து, பிராட்டியே, "நீயும் முறுவல் பூத்து எமக்கு அல்லல் விளைவிக்க வேண்டாம். ஆழிநங்காய், நான் உனக்கே அடைக்கலம்!

தொல்லை அரக்கியாகிய சூர்ப்பநகையை மூக்கரிந்திட்டது போல் என்னையும் மூக்கரிவது போலத் துறக்கலாமோ? என்னை மணந்துகொள்வதாக மாயவன் சொன்ன சொல்லும் பொய்யாகிப் போகுமானால் நான் இவ்வுலகில் பிறந்ததும் பொய், நான் வாழ்வதும் பொய்யாகிப் போகுமே'' என்று இறைஞ்சுகின்றாள்.

இவ்வாறு, ஆண்டாள் மேகங்களையும், மயில்களையும், குயில்களையும், கடலையும், திருமகளையும் பார்த்துப் புலம்பியும் பயன்ஒன்றும் விளையவில்லை. அதனால் மிகவும் மனஞ்சோர்ந்து தம் தோழியைப் பார்த்து "நல்ல என் தோழியே! நாகப்பாம்பின்மீது படுத்துறங்கும் நம் தலைவர் மிகவும் பெரியவர்; செல்வர்; அவர் நமக்கு அருள் செய்யாது துறப்பரேல் சிறு மானிடராகிய நாம் என்ன செய்ய முடியும்? நம்மால் முடியாது போனாலும் நம் திருவில்லிபுத்தூரில் வாழும் நம் தந்தையாகிய **விட்டுணுசித்தர்** தம் அன்பின் ஆற்றலால் தமது வழிபடு கடவுளை இங்கு வருவிப்பரேல், அப்போது நாம் மாயவனைக் காண்போம்'' என்று கூறுகின்றாள். பெரியாழ்வாரும் தம் மகள் கோதைபடும் துயரமெல்லாம் பார்த்துப் பார்த்து நெஞ்சம் உருகுகின்றார். அதனால்,

"நாடும் ஊரும் அறியவேபோய், நல்ல துழாயலங்கல்
சூடி, நாரணன் போமிடமெல்லாம் சோதித் துழிதருகின்றாள்
கேடு வேண்டுகின்றார் பலருளர், கேசவனோ டிவளைப்
பாடி காவலிடுமினென்றென்று பார் தடுமாறினதே''
(நாலாயிர திவ்விய பிரபந்தம்:290)

"காறை பூணும்; கண்ணாடி காணும்; தன்கையில்
வளைகுலுக்கும்;
கூறையுடுக்கும்; அயர்க்கும்; தன் கொவ்வைச் செவ்வாய்
திருத்தும்;
தேறித்தேறிநின் றாயிரம்பேர்த் தேவன் திறம்பிதற்றும்
மாறின் மாமணி வண்ணன் மேலிவள் மாலுறுகின்றாளே''
(நாலாயிர திவ்விய பிரபந்தம்: 293)

Scanned by CamScanner

"கைத்தலத்துள்ள மாடழியக் கண்ணாலங்கள் செய்திவளை
வைத்துவைத்துக் கொண்டென்ன வாணிபம் நம்மை வடுப்படுத்தும்
செய்த்தலையெழு நாற்றுப் போலவன் செய்வன செய்துகொள்ள
மைத்த டமுகில் வண்ணன் பக்கல் வளர விடுமின்களோ
(நாலாயிர திவ்விய பிரபந்தம்-294)

"பெருப்பெருத்த கண்ணாலங்கள் செய்து பேணிநம்மில்லத்துள்ளே
இருத்துவான் எண்ணி நாமிருக்க இவளும் ஒன்று எண்ணுகின்றாள்
மருத்து வப்பதம் நீங்கினா ளென்னும் வார்த்தைபடுவதன்முன்
ஒருப்ப டுத்துஇடு மின்இவளை உலகளந் தான் இடைக்கே"
(நாலாயிர திவ்விய பிரபந்தம்-295)

என்பன போன்ற பாசுரங்களால் உயர்வும் உருக்கமும் பெறப் பெரியாழ்வார் பாடுகின்றார். தம் மெய்யடியார் ஆகிய பெரியாழ்வாரின் துயரத்தை இறைவன் பொறுப்பானோ? அதனால், மாயவன் கோதையை மணக்கத் திருவுள்ளம் கொண்டான். அதனால், ஆண்டாள் உறக்கத்தின்போது இன்பந்தரும் கனவுகள் பல காணத் தொடங்கினார்.

"என்னைத் திருமணம் செய்துகொள்வதற்காக ஆயிரம்
யானைகள் தொடர்ந்துவர நாராயணன் மாப்பிள்ளை ஊர்வலம்
வருகின்றான். அவனை நம்மூரில் உள்ளவர்கள் எங்கும் தோரணம்
கட்டி, பூரண கும்பம் வைத்து வரவேற்பதுபோல் நான் கனவு
கண்டேன்"

"என்னை மணந்துகொள்வதற்காக மதுசூதன் வந்து என்
கையைப் பற்றிக்கொள்வதாகக் கனவு கண்டேன்"

"திருமால் தன்னுடைய திருக்கைகளால்
என் திருவடிகளைத் தொட்டு அம்மிமேல் வைத்து
அருந்ததியைக் காட்டக் கனவு கண்டேன்"

இவ்வாறு ஆண்டாள் தம்முடைய ஆசைக் கனவுகளைத் தம் தோழிக்கு உரைக்கும் பாடல்கள் அனைத்தும் நம் ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பவை ஆகும்.

"வாரணம் ஆயிரம் சூழ வலம்செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்

பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ நான்"
(நாலாயிர திவ்விய பிரபந்தம்-556)

"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீநான்"
(நாலாயிர திவ்விய பிரபந்தம்-561)

"இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை உடையவன் நாராயணன் நம்பி
செம்மை உடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான்"
(நாலாயிர திவ்விய பிரபந்தம்-563)

என்றெல்லாம் பாடிய ஆண்டாளின் கனவு, நனவாகும் காலம் வந்தது. மாயவன் பெரியாழ்வார் கனவில் தோன்றி, ஆண்டாளைத் திருவரங்கத்துக்கு அழைத்துவந்து, தம்மிடம் சேர்ப்பிக்குமாறு ஆணையிட்டார். · பெரியாழ்வாரும் ஆண்டாளைத் திருவரங்கத்துக்கு அழைத்துச் சென்று அன்பர்கள் முன்னிலையில் அரங்கன் முன்னர் நிறுத்தினார். திருவரங்கப் பெருங்கடவுளாகிய திருமாலும் ஆண்டாளின் திருக்கரம் பற்றித் தம்முடன் இணை பிரியாதிருக்கும் பெரும்பேற்றை ஆண்டாளுக்குத் தந்தருளினார். ஆண்டாளை அரங்கன் மணந்து கொண்டதால் பெரியாழ்வார் பெருமகிழ்ச்சி அடைந்தார், ஆனால் ஆண்டாளைப் பிரிந்திருக்க அவரால் முடியவில்லை.

ஒருமகள் உடையேன் மன்னே!
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்; திருமால்தான்
கொண்டு போனான்

என்று புலம்பினார். ஆயினும், மனந்தேறித் திருவில்லிபுத்தூர் சென்று வழக்கம்போல் திருமாலைப் போற்றிப் புகழ்ந்து வழிபட்டுத் தம் வாழ்க்கையை இறைவன் திருவருளைப் பெறுவதற்காகச் செலவிட்டுவந்தார்.

Scanned by CamScanner

உலகில் பல சமயங்கள் இருக்கின்றன. பற்பல ஞானிகள் வாழ்கின்றனர். அவர்கள் எல்லாம் இறைவனை உயர்ந்தவனாகவும், தம்மைத் தாழ்ந்தவர்களாகவும் கருதிக் கொண்டு வழிபட்டவர்கள். ஆனால், ஆண்டாளும் மீராவும் இறைவனைத் தம்முடைய நண்பனாய்க்கருதி இறைவனோடு பேசிப்பழகி இறைவனுடன் இரண்டறக் கலந்த பெருமையுடையவர்கள். ஆண்டாள் திருவில்லிபுத்தூரில் வாழ்ந்த காலத்தில் பாடிய முப்பது திருப்பாவைப் பாடல்களும் மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவைப் பாடல்களைப்போல மிகவும் சிறப்புடையவை.

தமிழ் நாட்டில், மார்கழி மாதத்தில், நல்ல நாயகரை அடையவும், நாடு செழிக்கவும் கார்த்தியாயினி தேவியை வேண்டிக்கொண்டு கன்னிப்பெண்களால் நோற்கப்பெறுவதே பாவை நோன்பாகும். இப்பாவை நோன்பு மார்கழி மாதத்தில் தொடங்கப்பெற்று, அம்மாதத்து முழுமதி நாளன்று நிறைவு பெறும். திருப்பாவை முதற்பாட்டு

**மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்**
**நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்** (திருப்பாவை-1)

என்று தொடங்குகின்றது. அதனால், மார்கழி மாதத்தே மதிநிறைந்த நாளான பௌர்ணமியன்று வைகறைப் போதில் அத்திருநாளின் நீராட்டம் தொடங்கி நடைபெறும் என்பது தெரிகிறது. கன்னியர் பாவை நோன்பு நோற்பதால் நாடு முழுதும் மாதம் மும்மாரி மழைபொழியும்; அதனால், நாடு வளம்கொழிக்கும். இதனை

**ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி**
**நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்**
**தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து**
**ஓங்குபெருஞ் செந்நெலூடு கயல் உகள**
**பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி**
**வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற்பெரும் பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்** (திருப்பாவை-3)

Scanned by CamScanner

என்னும் திருப்பாடலால் அறியலாம். நோன்பு நோற்கும் கன்னிப் பெண்கள், வெள்ளியெழுந்து வியாழம் உறங்கும் வைகறைப் போதில் நீராடி, தம்மை ஒப்பனை செய்துகொள்ளாமல், நெய் முதலியவற்றை உண்ணாமல், வெறும் வயிற்றுடனும் தூய நெஞ்சுடனும் இறைவனை வேண்டிக் கொள்வர்; செய்யக்கூடாத செயல்களாகிய கோள்சொல்லுதல் முதலிய தீய செயல்களை விட்டொழிக்க உறுதி பூண்பர். இதனை

"வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம், பாலுண்ணோம், நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம், மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம்; தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்" (திருப்பாவை-2)

என்னும் ஆண்டாள் பாட்டு அழகுற விளக்கும். ஆண்டாள் இயற்கையைப் பாடுவதிலும் இறைவன் பெருமையைப் பேசுகிறார். மேகம் கடலுக்குள் சென்று தண்ணீரைக் குடித்து, திருமாலைப் போன்று கரிய நிறம் படைத்து, அவனது கையில் உள்ள சக்கரப் படையைப்போல் மின்னி, அவன் வாயில் வைத்து ஊதும் பாஞ்சசன்னியம் என்னும் வலம்புரிச் சங்கைப்போல் முழங்கி, அவனது சாரங்கம் என்னும் வில்லிலிருந்து அம்புகள் பாய்வன போல் மழைநீரை இடைவிடாமல் பொழிகின்றன என்கின்றார்.

"மாயனை, மன்னும் வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூவித் தொழுது
வாயினாற் பாடி, மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும், புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும்" (திருப்பாவை-5)

என்பது ஆண்டாளின் அசைக்க முடியாத நம்பிக்கையைக் காட்டும். மழைக்காலத்தில் மலைக்குகையில் படுத்துறங்கிய சிங்கம் ஒன்று வைகறையில் துயிலெழுந்து சோம்பல் நீக்கி,

முழங்கி, வெளியில் புறப்பட்டு வருவது போன்று, கண்ணன் தன் கோயிலிலிருந்து புறப்பட்டு வெளியில் வந்து சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து எம்முடைய வேண்டுகோளைக் கேட்டு அருள்பாலிக்க வேண்டும் என்பது ஆண்டாளின் வேண்டுகோள்.

மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணாஉன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்

(திருப்பாவை-23)

என்னும் ஆண்டாளின் விருப்பமே அக்காலத்துக் கன்னியர் விருப்பமும் ஆகும். ஆண்மகன் ஒருவன் எவ்வாறு அருள்பாலிக்க வேண்டும் என்பதை அழகாய் விளக்கும் திருப்பாட்டு இது.

இவ்வாறு ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பாடல்கள், தமிழ்மொழி வாழும் காலமெல்லாம் வாழ்ந்து சிறக்கும் என்பதில் ஐயமில்லை. தாம் சிறப்புற்று வாழ்வதுபோலத் தம்மைச் சார்ந்தாரும் சிறப்புற்று வாழவேண்டும் என்று கருதிய ஆண்டாளின் திருவுள்ளம் திருப்பாவைப் பாடல்களால் பெரிதும் விளங்கித் தோன்றுகின்றது. கண்ணன் ஒருவனே ஆண்மகன், உலகத்தில் வாழும் ஏனைய ஆடவர்கள் எல்லாம் கண்ணனோடு இரண்டறக் கலக்கவல்ல காரிகையரே என்பது மீராவின் எண்ணம் ஆகும். யான், எனது என்னும் செருக்கறுக்க வேண்டுவார்க்கு மீராவின் வாழ்க்கை நெறி ஒரு சிறந்த வழிகாட்டியாகும்.

அன்பு மிகுதியால் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற ஆண்டாளும் மீராவும் ஆண்டவன் அடியார்கள் அனைவராலும் அன்புடன் போற்றி வணங்கப்பெறுவர் என்பது உறுதி.

Scanned by CamScanner